# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS .No. 60/2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு. நெடுமாறன் | ஊர் | : | |
| த.பெ. | : | திரு. தங்கவேல் | மாவட்டம் | : | |
| வயது | : | | தொழில் | : | |

2025ம் ஆண்டு ஜுலை திங்கள் 23-ஆம் நாள் **பி.சா.1ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

நான் முதல் பிரதிவாதி. சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என் பெயரில் வாதி தண்டபாணி மருத்துவகல்லூரி மருத்துவமனையில் எனக்கு எதிராக புகார் நகல் ஏற்கனவே எனது தரப்பு சான்றாவணம் 1 ஆக குறியாகியுள்ளது.

<u>5ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

5ஆம் பிரதிவாதி கோவிந்தசாமிக்கு நான், முருகானந்தம், ரிஸ்வான், ஐயப்பன் ஆகியோர் சேர்ந்துதான் சொத்தை விற்றோம் என்றால் ஆமாம். சொத்தின் விற்பனை தொடர்பாக 5ஆம் பிரதிவாதியிடம் பேசிய போது சொத்தின் அசல் ஆவணங்களை காண்பித்தோம் என்றால் ஆமாம். தண்டபாணியிடம் போன் செய்து வாதியிடம் பவர் கொடுத்தது உண்மையா என்று விசாரித்தார் என்றால் ஆமாம். அதேபோல் அசல் ஆவணம் கொடுத்தது உண்மையா என்று விசாரித்தார் என்றால் ஆமாம். 5ஆம் பிரதிவாதி சொத்திற்கான முழு கிரயத்தொகையும் வாதி தண்டபாணியிடம் கொடுத்துவிட்டதாக நாங்கள் சொன்னோம் என்றால் ஆமாம். அதேபோல் வாதியிடம் 5ஆம் பிரதிவாதி கிரயத்தொகை நீங்கள் பெற்றுகொண்டீர்களா என்று விசாரித்தார்

என்றால் ஆமாம். சரியான பிரதி பிரயோஜனத்தை எங்களிடம் கொடுத்துதான் எங்களிடம் 5ஆம் பிரதிவாதி கிரயம் பெற்றார் என்றால் ஆமாம்.

2ஆம் பிரதிவாதி மற்றும் வாதி தரப்பில் குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோள்படி ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.